## அமைதியின் சத்தம்!

வாசிக்க: யோபு 42:1-17

***"கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்" (சங் 40:1அ)***

பொறுமைதான் எதற்கும் இரகசியம்! வெற்றிகரமான அறுவை சிகிச்சைகள் செய்ய மருத்துவர்களுக்குப் பொறுமை வேண்டும். பிரமாண்டமான கட்டிடங்கள் கட்டப் பொறியியலர்களுக்குப் பொறுமை வேண்டும். சிறந்திலங்கும் மாணவரை உருவாக்க ஆசிரியர்களுக்குப் பொறுமை வேண்டும். பொறுப்புணர்வுள்ள பிள்ளைகளை எழுப்பப் பெற்றோருக்குப் பொறுமை வேண்டும். விளங்காத புதிர்களை ஆராய்ந்துபார்க்க விஞ்ஞானிகளுக்குப் பொறுமை வேண்டும். சமாதானமுள்ள குடும்பங்களைக் கட்டியெழுப்பத் தம்பதியருக்குப் பொறுமை வேண்டும். புனிதமான குணநலன்களை வளர்க்கக் கிறிஸ்தவர்களுக்குப் பொறுமை வேண்டும்.

நமது வாழ்க்கையில் இன்னல்களையும், இழப்புகளையும், நோய்களையும், தோல்விகளையும் நம்மைத் தண்டித்துத் திருத்துவதற்கான பிரம்பாகக் கடவுள் அனுமதித்து வருகிறார். இவ்விதத் தண்டனைகளெல்லாம் வெறுமனே அவரது கோபத்தின் வெளிப்பாடல்ல. நமது முழுமையான மாற்றம் என்ற முடிவை மனதில் வைத்தே ஆண்டவர் இவ்விதம் நம்மில் இடைபடுகிறார் (எபி 12:10). நமது பிரச்னையோ உடனே தீர்வுகளும் விளக்கங்களும் வேண்டுமென்பதே (வச 11). கடவுளது அமைதியெனும் குரலைப் புறக்கணித்துவிட்டு தவறான திசைகளில் திரும்புகிறோம். காரியம் இன்னும் மோசமாகிக் குழம்பிவிடுகிறது. இறைவனது இடைபாடுகளில் நாம் பொறுமையிழப்பதால் நமது நேரமும் பலமும்தான் வீண்போகும். ஒரு சாதாரண சுளுக்கு மோசமாகி மூட்டு பிசகிப்போகும் (வச 13). பொறுமையாய்த் தாங்கிக்கொள்வதோ மனவுறுதியுண்டாக்கி நற்குணத்தைப் பெருக்கும் (ரோ 5:3,4).

கிறிஸ்தவ வாழ்வின் துவக்கத்தில் நாம் கடவுளின் பரிசுத்தத்தைக் காதுகளினால் தான் "கேட்டோம்." பரிசோதிக்கும் நெருப்பின் வழியாய் நடந்து வந்தபின்னரோ அவரது பரிசுத்தத்தைக் கண்களால் "காண்போம்." நமது மனந்திரும்புதல் ஆழப்படும். இனி பீடத்தண்டை மனந்திரும்புதலின் ஜெபம் ஏறெடுப்பது மட்டுமல்ல; குப்பைக் கிடங்கில் மனந்திரும்புதலின் கண்ணீர்விடும் அனுபவமும் உண்டாகும்! இதுதான் யோபுவின் அனுபவமாம் (யோபு 42:5,6). "யோபுவின் பொறுமையைப்" பின்பற்ற வேதம் நம்மை அழைக்கிறது (யாக் 5:11). காலமெல்லாம் பாடுகளின் பள்ளியிலும், கசக்கும் கல்லூரியிலும் நாம் பயின்றுகொண்டேயிருக்கவேண்டும்.

திமிர் பிடித்த அநேகரது வாழ்க்கை முறையை நொறுக்கக் கடவுள் வியாதிகளைப் பயன்படுத்தியிருக்கிறார். கொல்லும் நோயொன்றை அனுபவித்த மன்னன் எசேக்கியா, "என் ஆயுளின் ஆண்டுகளிலெல்லாம் என் ஆன்மாவின் கசப்பை நினைத்து நடந்துகொள்வேன்" என்று தீர்மானித்தான் (ஏசா 38:15ஆ). பொறுமையால் மனம் இனிக்கும், சினம் தணியும், அகம் அடங்கும்!

தப்பமுடியாத, விளக்கமுடியாத சூழல்களில் கடவுளிடம் யோபு சொன்னதையே நாமும் சொல்லுவோம்: "இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறு உத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன்" (யோபு 40:4).

*அதிசீக்கிரமாய் நீங்கும் உபத்திரவம் அதிக நித்திய கன மகிமை தரும்;*
*பலவித இன்னல் கண்டும் சிலவேளை சிட்சை வந்தும் பதறாமல் பொறுப்பேனையா!*